**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கும்முடிப்பூண்டி**

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 55 / 2023 | | RPF கும்மிடிப்பூண்டி நிலையம் |
| பெயர் : இராமலிங்கம் | அ.சா.1 | நாள் : 14.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

Senior section Engineer கொடுத்த அசாஆ.1 களவறிக்கையில் காணாமல் போன பொருட்களின் மதிப்பு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் அவரது அறிக்கையில் இரயில்களின் இயக்கம் தடைப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காணாமல் போன பொருட்களின் இரயில்வே குறியிடு அல்லது வேறு குறியீடு இருந்ததாக அசாஆ.2 அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காணாமல் போன பொருட்களின் தோராய எடை பற்றியும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காணாமல் போன பொருட்கள் Straight line காப்பரா அல்லது மோல்டிங் காப்பரா என்று அசாஆ 2 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 2 அறிக்கை பதிவேடுகளின் அடிப்படையில் அளித்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 3 ல் தோராய மதிப்பீடு குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அதற்கான சான்று இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். முதலாம் எதிரி எழுத படிக்க தெரியாது கையெழுத்து மட்டும் போட தெரியும் என்றால் சரிதான். முதலாம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பேண்ட்ரோல் கிளிப்புகளில் குறியீடுகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். மேலும் பேண்ட்ரோல் கிளிப்புகளுக்கு களவறிக்கை ஏதும் இல்லை என்றால் சரிதான். அசாஆ.4 மகசர் காவல் துறை சார்ந்தவர்களை சாட்சிகளாக வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரிதான். அசாஆ.5 முதலாம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு குறியீடுகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். மேலும் கடந்த 5 நாட்களுக்கு முன்னர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் பழைய இரும்பு கடை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் 2ம் எதிரியின் பெயரோ

அல்லது கடையின் முழு விலாசமோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் காவல் துறை சார்ந்தவர்களை சாட்சிகளாக வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரிதான். அசாஆ 6 ல் இரயில்வே காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் சம்பவ இடம் அமைந்துள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசாஆ.6 மற்றும் 7 ஆனது பார்வை மகசர்களில் காவல் துறை சார்ந்தவர்களை சாட்சிகளாக வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரிதான். முதலாம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாம் எதிரியின் கடையில் எந்தெந்த தேதியில் எவ்வளவு பொருட்கள் எவ்வளவு எடைக்கு போட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– இராமலிங்கம்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.14 17:02:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி